1979 மார்ச் 12]

பணியாற்றுவோருக்கு மட்டும் இன்னும் வழங்கப்படாமல் இருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) & (ஆ) மின்சார வாரியத்தின் செலவில் இல்லாமல் தங்கள் சொந்தச் செலவில் பட்ட மேற்படிப்புத் தகுதி பெற்றுள்ள பொறியாளர்களுக்கு சிறப்பு ஊதிய உயர்வு வழங்கப்படுகிறது.

## மேலத்தொட்டியபட்டியில் நியாயவிலைக் கடை.

*வினா எண். 340—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூர் தொகுதி பிள்ளையார் நத்தம் பஞ்சாயத்து, மேலத்தொட்டியபட்டி கிராமத்தில் நியாய விலைக் கடை நிறுவவேண்டும் என பொதுமக்களிடம் இருந்து அண்மையில் கோரிக்கைகள் வந்துள்ளனவா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி :

(அ) இது சம்பந்தப்பட்ட கோரிக்கை அரசுக்கு எதுவும் வரப்பெறவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, நான் திருவில்லிப்புத்தூர் தொகுதியில் சுற்றுப்பயணம் செய்யும்போது பிள்ளையார் நத்தம் பஞ்சாயத்து, மேலத்தொட்டியபட்டி கிராமத்தில் உள்ள மக்கள் என்னிடத்தில் கோரிக்கை மனு கொடுத்தார்கள். அந்த மனுவை நான் மாவட்ட கலெக்டர் அவர்களுக்கும், திருவில்லிப்புத்தூர் சரக டி.ஆர். அவர்களுக்கும் அனுப்பினேன். ஆனால் அது இல்லை என்று சொல்லப்படுகிறது. ஆகவே இனிமேல் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பப்படும்போது ரெஜிஸ்டர் செய்து அனுப்பினால்தான் சரியாக இருக்கும் என்று நினைக்கிறேன். ஆகவே இப்போது நான் கூறுவதையே ஒரு கோரிக்கையாக ஏற்றுக்கொண்டு மீண்டும் அதனைப் பரிசீலனை செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. .ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மேலத்தொட்டியப்பட்டி என்ற கிராமம் பிள்ளையார் நத்தம் என்ற வருவாய் கிராமத்திற்கு உட்பட்ட ஒரு சிற்றூராகும். ஆகவே மேலத்தொட்டியப்பட்டி கிராமத்திற்காக, இந்த பிள்ளையார் நத்தம் என்ற கிராமத்தில் எல்லா வசதிகளும் செய்யப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

## தஞ்சை மாவட்ட கூட்டுறவு விவசாயக் கடன் சங்க ஊழியர் மாநாடு.

*வினா எண். 341.—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டக் கூட்டுறவு விவசாயக் கடன் சங்கங்களின் ஊழியர்கள் மாநாடு 1978 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 16 ம் நாளில் தஞ்சையில் நடந்தது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) அவர்கள் கோரிக்கை அரசுக்கு வந்ததா, அவைகள் என்ன?

(இ) அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:

அறிக்கை *அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் அளித்திருக்கக் கூடிய மகஜர் மிகவும் முக்கியமானது. அவர்கள் ஏற்கனவே கூட்டுறவுச் சங்கங்களில் இரண்டு ஆண்டுகள், மூன்று ஆண்டுகள் பணியாற்றியவர்களாக இருக்கின்றபோது அவர்கள் அப்படி பணியாற்றிய காலத்தையே பயிற்சி காலமாக பாவித்து அவர்கள் மேலும் பயிற்சி பெற வேண்டியதில்லை என்கிற உத்தரவை வெளியிட அரசு பரிசீலனை செய்து ஆவன செய்யுமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் மேலான யோசனையை அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

*386–390ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.